**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், உத்தமபாளையம்.**

முன்னிலை – திரு.P. காமராசு, B.A., B.L.,

நீதித்துறை நடுவர்,

உத்தமபாளையம்.

**2026 ஜுன்–09–ம் நாள் செவ்வாய்கிழமை**

2057 திருவள்ளுவராண்டு ஸ்ரீபராபவ வருடம் வைகாசி–26–ம் நாள்

**ஆண்டு பட்டிகை வழக்கு எண்.22/2021**

**CNR.No.TNTH07-002986-2020**

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | - | அரசு சார்பாக – காவல் ஆய்வாளர், ஓடைப்பட்டி காவல் நிலையம், குற்ற எண்.31/2020. |
| // எதிர் // | | |
| எதிரி | - | மோகன்குமார் (வயது 32/2020),<br>த/பெ.பழனிராம்,<br>பாடசாலை தெரு, தென்பழனி. |
| குற்றம் சாட்டப்பட்டது | - | எதிரி மீது பிரிவுகள் 279, 338, 304(A) IPC மற்றும் 181(3), 196 M.V Act – ன் கீழ் |
| குற்றச்சாட்டு வனையப்பட்டது | - | எதிரி மீது பிரிவுகள் 279, 338, 304(A) IPC மற்றும் 181(3), 196 M.V Act – ன் கீழ் |
| தீர்மானம் | - | குற்றத்தின் தன்மை கருதியும் இருதரப்பு பரஸ்பர விருப்பநிலை ஒப்பந்தப்படி இவ்வழக்கு மேற்படி மூன்று முறைகளில் பேரம் பேசுதல் மூலம் எதிரி மீதான பிரிவு 304(A) – ன் கீழ் குற்றம் இருதரப்பினரால் சமரசம் செய்ய இயலாத (non-Compoundable offence) என்பதால் பேரம் பேசுதல் மூலம் நன்னடத்தையில் மன்னித்து விடுவிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே, எதிரியை இவ்வழக்கில் குற்றவாளி என தீர்மானித்து, பேரம் பேசுதல் மூலம் எதிரிக்கு பிரிவு 304(A) இதசவில் கிடைக்கக்கூடிய 2 வருட தண்டனையில் 4–ல் 1 பகுதி தண்டனை 6 மாதத்தை பேரம் பேசுதல் மூலம் மன்னித்து |

| | | |
|---|---|---|
| | | பிரிவு 293 BNSS–ன் படி நிபந்தனையின் பேரில் பிரிவு 3 நன்னடத்தை சட்டத்தின்படி தண்டனையை ஒத்திவைத்து பிரிவு 294–BNSS ன் படி எதிரி 1 வருடத்திற்கு நன்னடத்தை பேணுதல் வேண்டும், தவறும்பட்சத்தில் அவர் மீது மேற்படி தண்டனை பின்னர் செயல்படுத்தப்படும் என உத்தரவிடப்படுகிறது. மேலும் பிரிவு 279, 338 இதச மற்றும் 181(3), 196 M.V Act–ன் கீழ் குற்றச்சாட்டு தனியாக தண்டனை தேவையில்லை என இந்நீதிமன்றம் தீர்வு காணப்படுகிறது. |

இவ்வழக்கானது 20.01.2021–ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு இறுதி விசாரணையின்போது குற்றம்முறையிடுபவர் தரப்பில் அரசு குற்றவியல் உதவி வழக்கறிஞர் நிலை 2, உத்தமபாளையம் அவர்களும், எதிரி தரப்பில் திரு.M.அழகேசன், அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சாட்சி, சான்றாவணங்களை பரிசீலனை செய்து, இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## <u>தீர்ப்புரை</u>

### <u>இறுதியறிக்கையின் சுருக்கம்</u>

1) கடந்த 23.02.2020ம் தேதி 14.30 மணிக்கு 2ம் சாட்சி முனியாண்டி TN 37 AV 8646 TVS XL இருசக்கர வாகனத்தில் பிச்சை என்பவரை பின்னால் உட்கார வைத்து கொண்டு ஓடைப்பட்டி சமத்துவபுரம் ஆர்ச் அருகில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி ஓட்டிச்சென்று, ஓடைப்பட்டி ரோட்டில் வடக்காக திரும்பிய பிறகு, எதிரி ஓடைப்பட்டியில் இருந்து தென்பழனி ரோட்டில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி TN 47 J 6733 TVS Max 100 என்ற இருசக்கர வாகனத்தை வாகன காப்பீடு இல்லாமலும், ஓட்டுநர் உரிமம் இல்லாமல் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஆரண் அடிக்காமலும் ஓட்டி வந்து, 2ம் சாட்சி முனியாண்டி ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதில், 2ம் சாட்சிக்கு வலது கண்புருவம், இடது காதில் சிறுதன்மையுடைய காயத்தையும், வலது மூக்கில் கொடுங்காயத்தையும் ஏற்படுத்தியும், பிச்சை என்பவருக்கு விபத்தால் சம்பவ இடத்திலேயே இறப்பை

ஏற்படுத்திய எதிரியின் செயல் ச/பி 279, 338, 304(A) IPC மற்றும் 181(3), 196 M.V Act–ன் கீழ் ஓடைப்பட்டி காவல் நிலைய காவல் ஆய்வாளர் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டு பேரம் பேசுதல் மூலம் தண்டனையை குறைக்க கோரியுள்ளார். மேற்படி இறுதியறிக்கை கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பி, எதிரி வழக்கில் ஆஜரானதும் வழக்கு ஆவணங்கள் பிரிவு 230– BNSS ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு, குற்றச்சாட்டுகள் வனைந்து, சாட்சிகளை விசாரணை செய்வதற்காக வாய்தா போட்டிருந்த நிலையில், எதிரி தரப்பில் பேரம் பேசுதல் மூலம் பிரிவு 290 BNSS–ன் படி M.P.No.8/2026 மனு தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 05.06.2026–ம் தேதி எதிரியின் தன்னிச்சை குறித்து தனியாக விசாரணை செய்தும், இந்நீதிமன்றம் உளநிறைவு அடைந்த பிறகு, வழக்கில் இறந்த நபரின் மனைவியான நிகர்நிலை புகார்தாரர் சுருளியம்மாளுக்கும், வழக்கில் காயம்பட்ட முனியாண்டிக்கும் அழைப்பாணை அனுப்பட்டு,

3) இவ்வழக்கு மாண்புமிகு நமது உச்சநீதிமன்றம் Suo Moto W.P.(Crl).No.4/21 14.09.2019– ம் தேதி பிறப்பித்த தீர்ப்பில் பத்தி "3.5..***On the date fixed, the court can inform the accused of the provisions of plea bargaining. The Court can also persuade the parties to compound the offence (if the offences are compoundable). The Court can also inform the accused of the benefits of Probation of offenders Act, 1958. The service of panel lawyers from District Legal Services Authority would also be made available to the accused/Complainant".*** மேற்படி தீர்ப்பில் கூறியுள்ள வழிகாட்டுதலின்படி எதிரிக்கு இந்த வழக்கை பேரம் பேசுதல் மூலம் முடித்துக்கொள்ள மனுதாக்கல் செய்து வழக்கில் எதிரியானவர் பிரிவு 290 BNSS ன் கீழ் பேரம் பேசுதல் மூலம் ஒத்திசைவு தீர்ப்பு பெற இந்நீதிமன்றத்தில் கடந்த 05.06.2026–ம் தேதி மனுதாக்கல் செய்தார். பின்னர் அரசு தரப்பிற்கும், நிகர்நிலை புகார்தாரர் மற்றும் வழக்கில் காயம்பட்ட நபருக்கும் அறிவிப்பு செய்யப்பட்டது.

4) பிரிவு 290(3) BNSS மனுவில் இவ்வழக்கில் எதிரி தனது மனுவில் குற்றத்தை ஒப்புக்கொள்வதாகவும், தன்னை நன்னடத்தையின் கீழ் விடுவிக்குமாறும் மனுவில்

கோரியுள்ளார். இந்நிலையில் இந்நீதிமன்றம் கடந்த 05.06.2026–ம் தேதி எதிரியை உள்ளரங்கில் வைத்து, (in Camera) தன்னிச்சையாக மேற்படி மனுவை தாக்கல் செய்துள்ளாரா என விசாரித்து, அவர் தன்னிச்சையாகத்தான் மனுதாக்கல் செய்துள்ளார் என்று திருப்தியுற்ற பிறகு, வழக்கில் "பரஸ்பர மனநிறைவு விருப்பநிலை"–யை அடைவதற்காக இவ்வழக்கில் இறந்த நபரின் மனைவியான நிகர்நிலை புகார்தாரர் சுருளியம்மாளுக்கும், வழக்கில் காயம்பட்ட முனியாண்டிக்கும், புலன்விசாரணை அதிகாரி மற்றும் அரசு உதவி வழக்கறிஞர் ஆகியோருடன் எதிரியும், எதிரி தரப்பு வழக்கறிஞரும், கடந்த 05.06.2026–ம் தேதியில் ஒன்று கூடி பேசி, இந்நீதிமன்றத்தின் முன்னிலையில் பரஸ்பர மனநிறைவு விருப்பநிலையை அடைந்ததை குறித்து பிரிவு 292 BNSS ன் படி உடன்படிக்கை தாக்கல் செய்தனர். மேற்படி தரப்பினர் அனைவரின் ஒப்பந்தம் தன்னிச்சையின் பேரில் நடைபெற்றதா என்பதை இந்நீதிமன்றம் உறுதிபடுத்தி, இந்நீதிமன்றம் அது சம்மந்தமாக அறிக்கை ஒன்றை தயார் செய்து பின்னர், இந்நீதிமன்றம் BNSS பிரிவு 293 படி இவ்வழக்கினை முடிவுக்கு கொண்டு வர தரப்பினர்களை கேட்டதன் பேரிலும், மேற்படி பரஸ்பர மனநிறைவு விருப்பநிலையில் கண்டபடி எதிரி, இறந்த நபரின் மனைவியான நிகர்நிலை புகார்தாரர் சுருளியம்மாள், வழக்கில் காயம்பட்ட முனியாண்டி எதிரியை மன்னித்துவிடலாம் என்றும், இறந்த நபரின் மனைவியான நிகர்நிலை புகார்தாரர் சுருளியம்மாளுக்கு இழப்பீடு ரூ.1,50,000/– (ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய்) மற்றும் வழக்கில் காயம்பட்ட முனியாண்டிக்கு இழப்பீடு ரூ.10,000/– (பத்தாயிரம் ரூபாய்) பெற்றுக்கொண்டதாக, கூறியதன் அடிப்படையிலும், எதிரிக்கு முன்வழக்கு தண்டனை எதுவும் இல்லை உறுதி செய்யப்பட்டும்,

5) நிகர்நிலை புகார்தாரர் சுருளியம்மாள் க/பெ.பிச்சை என்பவர் நீதிமன்றத்தில் ஆஜராகி, இவ்வழக்கில் இறந்துபோன பிச்சை நிகர்நிலை புகார்தாரின் கணவர் என்றும், எதிரியான மோகன்குமார் த/பெ.பழனிராம் என்பவரிடம் இக்குற்றத்திற்காக இழப்பீடு ரூ.1,50,000/– பெற்றுக்கொண்டதாகவும், வழக்கில் காயம்பட்ட முனியாண்டி இழப்பீடு ரூ.10,000/– பெற்றுக்கொண்டதாகவும், எதிரியை மன்னித்து விடுதலை செய்யலாம் என கூறினார்கள். அதன் பிறகு இரு தரப்பிலும் ஏற்பட்ட மனநிறைவு உடன்படிக்கை

இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு அதை பரிசீலனைக்கு எடுத்து இந்நீதிமன்றம் ஒரு அறிக்கை தயார் செய்து, சாட்சிகள் விசாரணை தேவையில்லை என்றும், குற்றச்சாட்டுகள் சமரசம் செய்யக்கூடிய குற்றச்சாட்டு அல்ல என்பதால் எதிரிக்கு பிரிவு 304(A) இதசவில் கிடைக்கக்கூடிய 2 வருட தண்டனையில் 4-ல் 1 பகுதி தண்டனை 6 மாதத்தை பேரம் பேசுதல் மூலம் மன்னித்து எதிரியை விடுதலை செய்யலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேலும், பிரிவு 279, 338 இதச மற்றும் 181(3), 196 M.V Act-ன் கீழ் குற்றச்சாட்டு தனியாக நிரூபிக்கப்படவில்லை என்றும் தீர்வு காணப்படுகிறது.

6) குற்றத்தின் தன்மை கருதியும் இருதரப்பு பரஸ்பர விருப்பநிலை ஒப்பந்தப்படி இவ்வழக்கு மேற்படி மூன்று முறைகளில் பேரம் பேசுதல் மூலம் எதிரி மீதான பிரிவு 304(A) -ன் கீழ் குற்றம் இருதரப்பினரால் சமரசம் செய்ய இயலாத (non-Compoundable offence) என்பதால் பேரம் பேசுதல் மூலம் நன்னடத்தையில் மன்னித்து விடுவிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே, எதிரியை இவ்வழக்கில் குற்றவாளி என தீர்மானித்து, பேரம் பேசுதல் மூலம் எதிரிக்கு பிரிவு 304(A) இதசவில் கிடைக்கக்கூடிய 2 வருட தண்டனையில் 4-ல் 1 பகுதி தண்டனை 6 மாதத்தை பேரம் பேசுதல் மூலம் மன்னித்து பிரிவு 293 BNSS-ன் படி நிபந்தனையின் பேரில் பிரிவு 3 நன்னடத்தை சட்டத்தின்படி தண்டனையை ஒத்திவைத்து பிரிவு 294-BNSS ன் படி எதிரி 1 வருடத்திற்கு நன்னடத்தை பேணுதல் வேண்டும், தவறும்பட்சத்தில் அவர் மீது மேற்படி தண்டனை பின்னர் செயல்படுத்தப்படும் என உத்தரவிடப்படுகிறது. மேலும் பிரிவு 279, 338 இதச மற்றும் 181(3), 196 M.V Act-ன் கீழ் குற்றச்சாட்டு தனியாக தண்டனை தேவையில்லை என இந்நீதிமன்றம் தீர்வு காணப்படுகிறது.

இத்தீர்ப்பானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு பின்பு இன்று 09.06.2026- ம் தேதி திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/திரு.P.காமராசு,
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.

**பிற்சேர்க்கை**

1. குற்றஞ்சாட்டப்பட்ட நபரின் அபிடவிட் மற்றும் பிரிவு 290 BNSS கீழ் தாக்கல் செய்த மனு M.P.No.8/2026.
2. எதிரியை BNSS பிரிவு 290(3)–ன் கீழ் மறைவான விசாரணை அறிக்கை (in Camera)
3. BNSS பிரிவு 292 ன் கீழ் வழக்கு தரப்பினர்களுக்கிடையே ஒருமித்த கருத்து எட்டுதல், மனநிறைவு அடைதல் ஒப்பந்தம் மற்றும் நீதிமன்ற அறிக்கை.

**பின்குறிப்பு–**

1. எதிரி ஆஜர். தீர்ப்பு விபரம் தெரிவிக்கப்பட்டது.
2. வழக்கின் முடிவு காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
3. வழக்குச் சொத்துக்கள் இல்லை.

ஒம்/திரு.P.காமராசு,
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.

// உண்மை நகல்//

KAMARASU P

Digitally signed by KAMARASU P
Date: 2026.06.09 19:38:28 +0530

நீதித்துறை நடுவர், உத்தமபாளையம்.